## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.52/2024

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா, அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜுலை மாதம் 13 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஸ்ரீதர் | மதம் | : இந்து |
| த/பெ | : ஏசுபாதம் | ஜாதி | : -- |
| வயது | : 34 | கிராமம் | : பூனிமாங்காடு |
| தொழில் : | விவசாயம், Electrician, Plumber | வட்டம் | : திருத்தணி |

**13.07.2026**

**வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதி விஜயசாமிநாதன் அழைத்து சாட்சி சொல்ல வந்தேன் என்றால் ஆமாம். விஜயசாமிநாதனை எனக்கு நன்கு தெரியுமா என்றால் தெரியும். எத்தனை வருடங்களாக எனக்கு விஜயசாமிநாதனை தெரியும் என்றால் 8 வருடங்களாக தெரியும். அவரை எனக்கு எப்படி தெரியும் என்றால் நான் மின்சாதன பழுதுபார்ப்பதற்காக அவரது வீட்டிற்கு சென்றுள்ளேன். எத்தனை முறை அவரது வீட்டிற்கு சென்றுள்ளேன் என்றால் பல முறை சென்றுள்ளேன்.

2. விஜயசாமிநாதன் வீடு எங்கு உள்ளது என்றால் கொல்லக்குப்பம் கிராமத்தில் அவரது நிலத்திற்கு பக்கத்திலேயே வீடு உள்ளது. எனது ஊருக்கும் கொல்லக்குப்பம் கிராமத்திற்கும் என்ன தொலைவு இருக்கும் என்றால் 2 கி.மீ. இருக்கும். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 3ல் 2021 முதல் 2023 வரை குத்தகைக்கு பயிர் செய்து வந்ததாக சொல்லியுள்ளேன்

என்றால் ஆமாம். என்ன புல எண்ணிற்கு நான் பயிர் செய்து வந்தேன் என்றால் எனக்கு புல எண் தெரியாது. என்ன அடிப்படையில் பயிர் செய்தேன் என்றால் நான் பயிர் வைக்கும்போது ஒரு குழிக்கு 200ரூபாய் வீதம் கொடுத்தேன். அது 3 மாதத்திற்கு ஆகும்.

3. நான் எந்த அடிப்படையில் பயிர் செய்தேன் என்பதற்கு ஏதேனும் ஆவணம், ஒப்பந்தம் உள்ளதா என்றால் இல்லை. விஜயசாமிநாதனுக்கு மொத்தம் எத்தனை ஏக்கர் நிலம் உள்ளது என்றால் 17 ஏக்கர் நிலம் உள்ளது. 17 ஏக்கர் என்ன என்ன புல எண்ணில் உள்ளது என்றால் புல எண் தெரியாது. எவ்வளவு இடம் என்பது தெரியும். 17ஏக்கருக்கு அருகில் யார் நிலம் உள்ளது என்பது தெரியுமா என்றால் கிழக்கே ஏரி, மேற்கே கோவர்தனம் நிலம், வடக்கே வனம் (Forest) ஆகும். **(சாட்சி தற்போது பின்வருமாறு மாற்றி கூறுகிறார்)** தெற்கே ஏரி உள்ளது. எனக்கு கிழக்கு மேற்கு திசை சரியாக தெரியவில்லை. நான் எத்தனை ஏக்கர் பயிர் செய்தேன் என்றால் 6 ஏக்கர் பயிர் செய்தேன். என்ன பயிர் செய்தேன் என்றால் ஒரு பருவத்தில் நெல்லும், மற்றொரு பருவத்தில் நிலக்கடலையும் பயிர் செய்திருந்தேன். கார்த்திகையில் கடலை பயிர் செய்து பிப்ரவரியில் அருவடை செய்துவிட்டு, ஏப்ரலில் நெற்பயிர் செய்வோம்.

4. எந்த எந்த காலத்தில் என்ன என்ன பயிர் செய்வோம் என்ற விவரத்தை எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான்தான் பயிர் செய்தேன் என்பதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி பிரகாஷ் கொல்லக்குப்பம் என்றால் ஆமாம். வழக்கு சொத்தில் பிரகாஷ் தற்போது என்ன பயிர் வைத்துள்ளார் என்றால் தைலச்செடி வைத்துள்ளார். விஜயசாமிநாதன் தற்போது என்ன பயிர் வைத்துள்ளார் என்றால் எந்த பயிரும் செய்யவில்லை. பிரகாஷை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். விஜயசாமிநாதன் நிலம் கோவர்தனம் நிலத்திற்கு கிழக்கே இருந்ததா மேற்கே இருந்ததா என்றால் மேற்கே இருந்தது. கோவர்தனத்திற்கு எவ்வளவு நிலம் இருக்கும் என்றால் தெரியாது. கோவர்தனம் நிலத்திற்கு மின்சாதனம் பழுது பார்க்க செல்வேனா என்றால் இல்லை.

5. கொல்லக்குப்பத்தில் இருந்து பூனிமாங்காட்டிற்கு செல்ல பொட்டல் வழியாக குறுக்கு வழி உள்ளது என்றால் இல்லை. பிரதான சாலைதான் உள்ளது. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் வழக்கு சொத்திற்கு வடக்கே வனப்பகுதியை ஒட்டி பூனிமாங்காடு செல்ல ஒரு பாதை உள்ளது என்றால் இல்லை. பிரதிவாதி சொத்தின் புல எண் என்ன என்றால் 551/6 ஆகும். **(சாட்சி தற்போது பின்வருமாறு மாற்றி கூறுகிறார்)** புல எண்.151/6 ஆகும். இதுதான் வழக்கு சொத்தின் புல எண் என்றால் ஆமாம். அது அரசு இடம் ஆகும். முள்செடியாக இருந்தது. எத்தனை வருடங்களாக முள்செடியாக இருந்தது என்றால் 2023 வரை முள்செடியாக இருந்தது. அதன்பின்பு அதை சுத்தம் செய்து பிரகாஷ் தைலசெடி வைத்துள்ளார்.

6. 2021க்குமுன்பு நான் அந்த சொத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த முள்செடிகளை எப்போது சுத்தம் செய்தார் என்றால் 2023ல் சுத்தம் செய்தார். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அங்கு முள்செடியே இல்லை என்றாலும் பிரகாஷ் கிரையம் வாங்கி அந்த சொத்தில் பயிர் செய்து வருகிறார் என்றாலும் சரியல்ல. நான் பயிர் செய்த நிலத்தின் புல எண்ணே எனக்கு தெரியாத நிலையில் பிரகாஷின் சொத்தை பற்றி வாதி சொல்லி கொடுத்து புல எண் உட்பட விவரத்தை பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அரசு நிலம் என்று எந்த ஆவணத்தின் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் கிராம நிர்வாக அதிகாரியிடம் சென்று ஆவணத்தை பார்த்தேன். என்ன ஆவணம் பார்த்தேன் என்றால் FMB பார்த்தேன்.

7. FMBல் அரசாங்க சொத்து என உள்ளதா என்றால் ஆமாம். அனாதீனம் என்று உள்ளது. அனாதீன நிலம் என்ன விஸ்தீரணம் என்றால் இடத்தை பற்றி தெரிந்து கொண்டேன். அதன் அளவு பற்றி தெரியவில்லை. எதற்காக நான் அங்கு சென்றேன் என்றால் விஜயசாமிநாதனுடன் சென்றேன். நான் பிரதிவாதி பிரகாஷிடம் வாதி விஜயசாமிநாதன் சொத்தும் அனாதீனம்தான் எனவே உங்கள் சொத்தையும் விஜயசாமிநாதனிடம் விற்றுவிடுங்கள் என சொன்னேனா என்றால் இல்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் விஜயசாமிநாதன் அரசாங்க

சொத்தை வாங்கியுள்ளார் என்பதால் பிரகாஷையும் விற்க சொல்லி கட்டாயப்படுத்தினேன் என்றால் இல்லை. விஜயசாமிநாதன் எனக்கு செலவுக்கு பணம் கொடுக்கவில்லை என்றால் நானே அரசாங்கத்திடம் மாட்டிவிடுவேன் என பிரகாஷை மிரட்டினேன் என்றால் இல்லை. விஜயசாமிநாதனிடம் மின்சார வேலைகளை செய்வதால் அவருக்கு பவ்வியப்பட்டு பொய்யான விவரங்களை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)